بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/11/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் பின்னணியில்**
**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹுதைபியா சமரச உடன்படிக்கை நிகழ்வு பற்றிக் கூறப்பட்டு வருகிறது. இதன் மேற்கொண்ட விபரத்தை எடுத்துரைப்பேன். இந்தத் தருணத்தில், சஹாபாவுக்குக் காவல் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக இவ்வாறு கூறப்படுகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் சஹாபாவுக்கு, இரவு நேரத்தில் காவல் காக்குமாறு கட்டளையிட்டிருந்தார்கள். தினமும் மூன்று பேர் மாற்றி மாற்றி காவல் காத்து வந்தார்கள்.

முஸ்லிம்களில் சிலர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அனுமதியுடன் மக்காவில் நுழைந்தாகவும் கூறப்படுகிறது. இவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பாதுகாப்பில் மக்காவுக்குள் நுழைந்தார்கள். பதுங்கியவாறு உள்ளே நுழைந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்த முஸ்லிம்கள் பற்றி குறைஷியர்களுக்குத் தெரியவந்ததும் இவர்கள் பிடிபட்டார்கள். குறைஷியர்களுக்குத் தங்களுடைய கூட்டாளிகள் பிடிபட்ட செய்தியும் கிடைத்து விட்டது. அவர்களை ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் பிடித்து வைத்திருந்தார்கள்.

குறைஷியர்களின் ஆயுதம் ஏந்திய மற்றொரு படை முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டது. அவர்கள் அம்புகளையும் கற்களையும் எறிய ஆரம்பித்தனர். இணைவைப்பாளர்களின் 12 குதிரை வீரர்களை முஸ்லிம்கள் சிறைபிடித்து விட்டார்கள். முஸ்லிம்களில் ஹஸ்ரத் இப்னு ஸுனைம் (ரலி) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். குறைஷியர்கள் அவர்களை அம்பெறிந்து கொன்று விட்டிருந்தனர். பிறகு, குறைஷியர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு குழுவை அனுப்பினர். அவர்களில் சுஹைல் பின் அம்ரும் இருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொலைவிலிருந்து அவரைப் பார்த்ததுமே சஹாபாவிடம், 'சுஹைல் மூலமாக உங்கள் விவகாரம் 'சஹ்ல்' அதாவது, எளிமையாகி விட்டது' என்று கூறினார்கள்.

அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, ‘உங்கள் தோழர்கள், அதாவது, ஹஸ்ரத் உஸ்மான் அவர்களையும், மற்ற சஹாபா பத்து பேரை சிறைபிடித்ததிலும், எங்களுடைய மக்கள் சிலர் உங்களுடன் சண்டையிட்ட விஷயத்திலும், எங்களுடைய கருத்துக்கூறும் மனிதர் எவரும் இணைந்திருக்கவில்லை. எங்களுக்கு இதுபற்றித் தெரியவந்தபோது, எங்களுக்கு இது முற்றிலும் பிடிக்கவில்லை. எங்களுக்கு இதுபற்றி எதுவும் தெரியாது. அது எங்களில் சீர்கெட்ட மனிதர்களின் வேலையாக இருந்தது. எனவே, இரண்டு தடவையில் நீங்கள் பிடித்துள்ள எங்களுடைய ஆட்களை எங்களிடம் திருப்பி அனுப்பி விடுங்கள்’ என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘நீ என் தோழர்களை விடாதவரை நான் அவர்களை அனுப்ப மாட்டேன்’ என்று கூறினார்கள். இதனால் அவர்கள் எல்லாரும், ‘சரி, நாங்கள் அவர்களை விட்டு விடுகிறோம்’ என்று கூறினார்கள். இதனால் குறைஷியர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும் மற்ற சஹாபா 10 பேரையும் திருப்பி அனுப்பி விட்டார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அவர்களுடைய ஆட்களை விட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் காஃபிர்கள் பிடித்துக் கொண்டார்கள் என்பது கூறப்பட்டது. இந்த செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எட்டியது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாவிடம் ஒரு பைஅத்தை, ஓர் உறுதிமொழியை வாங்கினார்கள். அதை பைஅத்துர் ரிஸ்வான் என்பார்கள். குறைஷியர்களுக்கு ஹுதைபியாவின் இந்த பைஅத் பற்றிய நிலை தெரியவந்ததும், அவர்கள் மிகவும் அச்சமடைந்தார்கள். அவர்களுடைய கருத்துக்கூறும் மக்கள் இவ்வாறு ஆலோசனை கூறினார்கள்:- சமரசம் செய்வது பொருத்தமாக இருக்கும். அதாவது, இப்படி சமரசம் செய்து கொள்ள வேண்டும்; இப்படிக் கூற வேண்டும்: இந்த ஆண்டு நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். அடுத்த ஆண்டு வந்து நீங்கள் 3 நாள்கள் மக்காவில் தங்கலாம். ஆனால், உங்களிடம் பயண விலங்கில் ஒரு நபருக்கான அவசியமான ஆயுதங்கள், அதாவது, உறையில் இடப்பட்டுள்ள வாள் மற்றும் அம்புக்கூடுகள் மட்டுமே இருக்க வேண்டும்.

ஹுதைபியா சமரச உடன்படிக்கை தொடர்பாக ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: சுஹைல் வந்தார். அவர் வந்ததுமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், ‘சரி வாருங்கள், இப்பொழுது நீண்ட விவாதத்தை விடுங்கள். நாங்கள் உடன்படிக்கைக்கு ஆயத்தமாக உள்ளோம்’ என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘நாங்களும் ஆயத்தமாக உள்ளோம்’ என்று கூறினார்கள். இவ்வாறு உரைத்தவாறே அன்னார் தம் செயலாளர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வரழைத்தார்கள். நிபந்தனைகள் பற்றி ஒரு பொதுவான விவாதம் ஏற்கனவே நடைபெற்று விட்டிருந்தது; விபரங்கள்

உடனுக்குடன் முடிவாக இருந்தன. எனவே, எழுத்தர் வந்தவுடனேயே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'எழுதுவீராக' என்று கூறினார்கள். மேலும், பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று துவங்கினார்கள்.

சுஹைல் சமரசத்துக்கோ ஆயத்தமாக இருந்தார்தான்; ஆனால், குறைஷியர்களுடைய உரிமைகளின் பாதுகாப்புக்காகவும், மக்கத்தினரின் கண்ணியத்துக்காகவும் மிகவும் விழிப்புடன் இருக்க நினைத்திருந்தார். அவர் அரேபியாவின் வழக்கத்திலுள்ள வழிமுறைப்படி, 'பிஸ்மிக்கல்லாஹும்ம' என்று எழுத வேண்டும் என பிடிவாதமாக இருந்தார். மறுபக்கம் முஸ்லிம்களுக்கும் சமுதாயத்தின் கண்ணியம் மற்றும் மார்க்கத்தின் தன்மானம் பற்றிய விஷயமாக இருந்தது. அவர்களும் அந்த மாற்றத்தினால் உடனடியாக அதிர்ச்சியடைந்தனர். அவர்கள், 'நாங்களோ கண்டிப்பாக பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்றே எழுதுவோம்' என்று கூறினார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'இல்லை, இதில் எந்தத் தவறும் இல்லை. சுஹைல் சொல்வது போல் எழுதிக் கொள்ளுங்கள்' என்று கூறி முஸ்லிம்களை அமைதியாக்கி விட்டார்கள்.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இது முஹம்மத் ரஸூலுல்லாஹ் {(ஸல்) அவர்கள்} செய்து கொண்ட உடன்படிக்கை ஆகும் என்று எழுதுங்கள்.' சுஹைல் மீண்டும் தடுத்து, 'இந்த ரஸூலுல்லாஹ் என்ற சொல்லை நாங்கள் எழுத விடமாட்டோம்' என்றார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'நீங்கள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளவிட்டாலும் நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன்தான்; ஆனால், நான் முஹம்மத் பின் அப்தில்லாஹ் (அதாவது, அப்துல்லாஹ்வின் புதல்வர் ஆன முஹம்மத்) ஆகவும் இருக்கிறேன் என்பதனால், சரி இப்படியே இருக்கட்டும்' என்று கூறினார்கள். இங்கு ஹுஸூர் (ஸல்) அவர்களின் எழுத்தர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஈமானின் தன்மான உணர்வு பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதாவது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பெயருக்குப் பின்னாலிருந்து 'ரஸூலுல்லாஹ்' என்ற சொல்லை அழிப்பதற்கு விருப்பமில்லை. பிறகு, கண்ணியத்திற்குரிய இறைதூதர் (ஸல்) அவர்கள் தாமே இந்தச் சொற்களை நீக்கிவிட்டார்கள்.

இந்தத் தருணத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உணர்ச்சி, உத்வேகம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்த நிகழ்வை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பண்பின் வடிவத்தில் இவ்வாறு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபா பெருமக்களைப் பார்த்து, 'நான் உங்களுக்குப் பல கட்டளைகள் இட்டுள்ளேன். ஆனால், நான் உங்களில் கலப்பற்ற மக்களிடமும் சிலவேளை எதிர்க்கும் உணர்வைக் கண்டிருக்கிறேன். ஆனால், அபூபக்ரிடம் நான் இந்தத் உணர்வை ஒருபோதும் கண்டதில்லை.

சமரச உடன்படிக்கை மடல் தொடர்பாக ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: எவ்வாறு இருப்பினும், பெரும் விவாதத்திற்குப் பிறகு இந்த உடன்படிக்கை முழுமை பெற்றது. ஏறத்தாழ எல்லா விஷயத்திலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கூற்றை விட்டுவிட்டு குறைஷியர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார்கள். மேலும், இறைநாட்டத்திற்கு ஏற்ப தமது இந்த உடன்படிக்கையை முழு நன்றியுணர்வுடன் நிறைவேற்றினார்கள். இந்த உடன்படிக்கையின் இரண்டு பிரதிகள் எடுக்கப்பட்டன. சாட்சிகளாக இருதரப்பின் கண்ணியத்திற்குரியவர்கள் பலர் இவற்றில் கையொப்பமிட்டனர். உடன்படிக்கை முழுமை பெற்ற பிறகு, சுஹைல் பின் அம்ர் உடன்படிக்கையின் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு, மக்காவை நோக்கி திரும்பிச் சென்று விட்டார். இன்னொரு பிரதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது.

சஹாபாவுக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த எழுதும் விவகாரத்தை முடித்த பிறகு, ஹுஸூர் (ஸல்) அவர்கள் தம் சஹாபாவிடம், 'எழுந்திருங்கள். உங்களுடைய ஒட்டகங்களை அறுத்து விடுங்கள். பிறகு தலையை மழித்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். அவர்களில் ஒருவர்கூட எழவில்லை. எதுவரை என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதையே மூன்று முறை கூறினார்கள். இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பெருந் துயரம் ஏற்பட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் மௌனமாக தமது கூடாரத்திற்குள் சென்றுவிட்டார்கள். கூடாரத்திற்குள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்குரிய துணைவியார் ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்கள் இந்தக் காட்சியைக் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் புத்திக் கூர்மையுள்ள பெண்மணியாகத் இருந்தார்கள். அவர்கள் தம் கண்ணியத்திற்குரிய மற்றும் அன்பிற்குரிய கணவரைக் கவலை தோய்ந்த நிலையில் உள்ளே வரக்கண்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது (அருளுக்குரிய) நாவிலிருந்து அன்னாரது கவலை மற்றும் வேதனையை அறிந்து கொண்டார்கள்.

எனவே, அனுதாபமாகவும், அன்பான முறையிலும், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} தாங்கள் வேதனையடைய வேண்டாம். இறையருளால் தங்கள் சஹாபா கட்டுப்படாதவர்கள் அல்ல. ஆனால், இந்த சமரசத்திற்கான நிபந்தனைகள் அவர்களைத் துயரத்தால் பித்துப் பிடித்தவர்களாக ஆக்கி வைத்துள்ளன. எனவே, எனது ஆலோசனை என்னவென்றால், தாங்கள் அவர்களிடம் எதுவும் கூறாதீர்கள். மாறாக, தாங்கள் மௌனமாக வெளியே சென்று தங்களது குர்பானுக்கான விலங்கை அறுத்து விடுங்கள். தங்களது தலையை மழித்துக் கொள்ளுங்கள். பிறகு தங்கள் சஹாபா தாமாகவே தங்களைப் பின்பற்றுவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த ஆலோசனை பிடித்துவிட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் இதன்படி செயல்பட்டார்கள். அறிவிப்பில் வருகின்றது, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபியாவில் 19 நாள்கள் தங்கியிருந்தார்கள். மேலும், 20 இரவுகள் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. அன்னார் திரும்பிச் செல்லும் பயணத்தில் உஸ்ஃபானுக்கு அருகில் குராஉல் ஃகமீம் எனும் பகுதியைச் சென்றடைந்தபோது, அது இரவு நேரமாக இருந்தது. அப்பொழுது அன்னார் அறிவிப்பு செய்ய வைத்து சஹாபாவை ஒன்று திரட்டச் செய்தார்கள்.

அன்னார் இவ்வாறு கூறினார்கள்: இன்று இரவு எனக்கு ஒரு சூரா (அதாவது, அல் ஃபத்ஹ் சூரா) இறங்கியது. அது எனக்கு உலகின் எல்லா விஷயங்களைக் காட்டிலும் அன்பிற்குரியதாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த வசனங்களை (அதாவது, அல் ஃபத்ஹ் சூராவின் 2 முதல் 4 வரையுள்ள வசனங்கள் மற்றும் 28 ஆவது வசனம் ஆகியவற்றை) சஹாபாவுக்கு ஓதிக்காட்டியபோது, அப்பொழுதுவரை சஹாபா பெருமக்கள் சிலரது மனதில் இன்னும் ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் கசப்பு எஞ்சியிருந்ததனால, அவர்கள், ‘வெளிப்படையில், நாம் தோல்வியடைந்து திரும்பிச் செல்கிறோம். இறைவன் நமக்கு வெற்றிக்கான நற்செய்தியைக் கூறுகிறானே!’ என்று வியப்படைந்தார்கள். எதுவரை என்றால், அவசரக்காரர்களாக இருந்த சஹாபா சிலர், ‘நாம் பைத்துல்லாஹ்வை வலம் வராமல் இழப்பிற்குரியவர்களாகத் திரும்பிச் செல்கின்ற இதுதான் வெற்றியா?’ போன்ற சொற்களையும் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரை இந்த விஷயம் எட்டியபோது, அன்னார் மிகவும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். ஒரு சுருக்கமான உரையில் உத்வேகத்துடன் இவ்வாறு கூறினார்கள்: “இது முற்றிலும் பொருளற்ற ஆட்சேபனையாகும். ஏனெனில், நமக்கு எதிராக போர்க்களத்தில் இறங்கியிருந்த குறைஷியர்கள் தாமே போரைக் கைவிட்டுவிட்டு அமைதிக்கான உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அடுத்த ஆண்டு நமக்காக மக்காவின் கதவுகளைத் திறந்து விடுவதற்கான வாக்குறுதியும் அளித்துள்ளார்கள். நாம் அமைதியுடனும் நிம்மதியாகவும் மக்கத்தினரின் குழப்பமூட்டுதலிலிருந்து பாதுகாப்பாக இருந்தவாறு எதிர்கால வெற்றிகளின் நறுமணத்தை நுகர்ந்தவாறு திரும்பிச் செல்கிறோம். எனவே, நிச்சயமாக இதுவொரு மகத்துவமிக்க வெற்றியாகும். இதே குறைஷியர்கள் உஹுது, அகழ் ஆகிய போர்களில் எப்படி உங்களுக்கு எதிராகப் படையெடுத்து வந்தார்கள் என்ற அந்தக் காட்சிகளை நீங்கள் மறந்து விட்டீர்களா? இந்தக் களம் விரிவாக இருந்தும் உங்களுக்கு குறுகலாகி விட்டிருந்தது. உங்களுடைய கண்கள் திறந்த வண்ணம் இருந்து விட்டன. நீங்கள் திணறிப் போனீர்கள். ஆனால், இன்று இதே குறைஷியர்கள் உங்களுடன் அமைதி மற்றும் சமரசத்திற்கான உடன்படிக்கை செய்கிறார்கள்.”

சஹாபா பெருமக்கள், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} நாங்கள் புரிந்து கொண்டோம்; நாங்கள் புரிந்து கொண்டோம். தங்களது பார்வை சென்றடைந்த இடம்வரை எங்களுடைய பார்வைகள் சென்றடைவதில்லை’ என்று பணிவுடன் கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹுதைபியா நிகழ்வுக்கு மேலான இறைவன் ‘தெளிவான வெற்றி’ என்று பெயரிட்டுள்ளான். மேலும், اِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِيْنًا என்று கூறியுள்ளான். அந்த வெற்றி பெரும்பாலான சஹாபாவுக்கும் மறைவாக இருந்தது. இன்னும் சொல்வதாயின், நயவஞ்சகர்கள் சிலர் மார்க்கத்தை விட்டுச் செல்வதற்குக் காரணமாக அமைந்தது. ஆனால், உண்மையில், அது தெளிவான வெற்றியாக இருந்தது. அதில் எதிர்வந்த விஷயங்கள் ஆழ்ந்து தொலைநோக்குப் பார்வையுடன் பார்க்க வேண்டியவையாக இருந்தன.

அல்லாமா பலாஸரீ இவ்வாறு எழுதுகிறார்: சமரசத்திற்குப் பல விளைவுகளும் கனிகளும் வெளிப்பட்டன. இறுதியில் கண்ணியத்திற்குரிய மக்கா மாநகரம் வெற்றிக் கொள்ளப்பட்டது. மக்கத்தினர் அனைவரும் இஸ்லாத்தில் நுழைந்து விட்டார்கள். மக்கள் கூட்டங்கூட்டமாக இஸ்லாத்தில் நுழையத் துவங்கினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் அருளுக்குரிய கனிகளில் ஒன்று இதுவும் ஆகும். அதாவது, மக்களுக்கு நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் வருவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியவற்றைக் கேட்டார்கள். எனவே, அவர்களில் நூற்றுக்கணக்கானோர் முஸ்லிம்கள் ஆகி விட்டார்கள்.

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மற்றவை இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)